செ.வெ.எண். 57/ஜூலை நாள் :22.07.2019

# தருமபுரி மதிகோண்பாளையம் முதல் நாயக்கன்கொட்டாய் வரை ரூ.25.68 கோடி மதிப்பீட்டில் 7.00 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி சாலை அமைக்கும் பணியை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார்.

தருமபுரி மதிகோண்பாளையம் முதல் நாயக்கன்கொட்டாய் வரை ரூ.25.68 கோடி மதிப்பீட்டில் 7.00 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி சாலை அமைக்கும் பணியை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப., அவர்கள் தலைமை வகித்தார். அப்போது மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் தெரிவித்ததாவது.

தருமபுரியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் சாலை மற்றும் தருமபுரியிலிருந்து திப்பம்பட்டி, போச்சம்பள்ளி வழியாக திருப்பத்தூர் செல்லும் சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் இதனை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மதிகோண்பாளையம் முதல் நாயக்கன்கொட்டாய் வரை ரூ.25.68 கோடி மதிப்பீட்டில் 7.00 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி சாலையாகவும், ஆட்டுக்காரன்பட்டி முதல் மதிகோண்பாளையம் வரை ரூ.18.95 கோடி மதிப்பீட்டில் 5.80 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாகவும் மாற்றியமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பில் தருமபுரி மதிகோண்பாளையம் முதல் நாயக்கன்கொட்டாய் வரை ரூ.25.68 கோடி மதிப்பீட்டில் 7.00 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இச்சாலையில் 3 சிறு பாலங்கள், 1 பாலம், 1125 மீட்டருக்கு தடுப்பு சுவர் தற்போதுவுள்ள 2 வழிச்சாலை 7 மீட்டர் அளவு கொண்டது. இதனை 4 வழிச்சாலையாக மாற்றி 15.70 மீட்டர் அகலத்தில் சென்டர் மீடியம் அமைத்து சாலை

அமைக்கப்படுகிறது. மேலும் ஆட்டுக்காரன்பட்டி முதல் மதிகோண்பாளையம் வரை ரூ.18.95 கோடி மதிப்பீட்டில் 5.80 கி.மீ. தொலைவிற்கு 2 வழிச்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றி சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியானது 15 மாதத்தில் நிறைவுபெற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மீதமுள்ள சாலைப்பணிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதியினை ஒதுக்கீடு செய்து தருவார்கள். தருமபுரியிலிருந்து ராமாக்காள் ஏரிக்கு செல்லும் சாலை விரைவில் சீரமைக்கப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு.எ.கோவிந்தசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான், சார் ஆட்சியர் திரு.ம.ப.சிவன் அருள், இஆப., மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.எஸ்.ஆர்.வெற்றிவேல், தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.டி.ஆர்.அன்பழகன், கோட்ட பொறியாளர்கள் திரு.நடராஜன், திரு.லோகநாதன், உதவி கோட்ட பொறியாளர்கள் திரு.குளோத்தும்மன், திரு.ஜெயகுமார், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பண்டக சாலை தலைவர் திரு.பூக்கடை ரவி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர்கள் திரு.பொன்னுவேல், திரு.சிவபிரகாசம், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திரு.பூக்கடை முனுசாமி, வட்டாட்சியர் திரு.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**